ஆசிய கண்டத்திலேயே மிகப் பெரிய கப்பற்படைத் தளம் என்று சொல்லக்கூடிய ஐ.என்.எஸ். ராஜாளி, இரயில்வே தொழிற்சாலை, மத்திய பாதுகாப்புப் படை போன்ற பெரிய மத்திய, மாநில நிறுவனங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் தொழிற்தகராறு குறித்து தொழிலாளர் நல நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேலூர் மாநகரத்திற்குச் செல்ல வேண்டும். அந்த நீதிமன்றம் வெகு தூரம் உள்ளதால் பாதிக்கப்பட்ட ஏழையெளிய தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாமல், வழக்குப் பதிவு செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். வேலூர் மாவட்டத்திலே குறிப்பாக எனது அரக்கோணம் தொகுதியில்தான் அதிகமான தனியார் தொழிற்சாலைகளும், அதிகமான தொழிலாளர்களும் உள்ளார்கள். எனவே, ஏழைத் தொழிலாளர்கள் வாழ்வின் ஒளிவிளக்காகத் திகழ்ந்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், அரக்கோணத்திலே ஒரு தொழிலாளர் நல நீதிமன்றத்தை அமைத்துத் தர வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரக்கோணத்தில் தொழிலாளர் அமர்வு நீதிமன்றம் ஒன்று தனியாக அமைக்க செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், தொழிற்தாவாக்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழிலாளர் நீதிமன்றம் முகாமிட்டு தீர்வு செய்ய வழிவகை உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 24]

158—

கோயில் தேர்

***5061—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, குமரெட்டையாபுரத்திலுள்ள முருகன் கோயிலுக்குத் தேர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், குமரெட்டையாபுரம் அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான பழுதுபட்டுள்ள மரத்தேரினைச் சீரமைத்திட, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி அரசு நிதியாக ரூ.10 இலட்சமும், பொது மக்கள் நன்கொடையாக ரூ.4.20 இலட்சமும் வழங்கி, திருத்தேரினைச் சீரமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருப்பதை இருப்பதாகக் காட்டுவது பழமை; இருப்பதை சற்று மாற்றிக் காண்பிப்பது புதுமை; இயலாத ஒன்றை, முடியாத ஒன்றை, இயன்றதாகச் செய்வது, முடிந்ததாகச் செய்வது புரட்சி. அத்தகைய புரட்சிகளை நித்தம் செய்கின்ற எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) விளாத்திகுளம் தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ச. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஒன்று முதல் இருபத்து ஐந்து வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

3. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 22 – காவல் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23 – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(அ) கோரிக்கை எண் 22 – காவல் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*